சுருக்கம்

பாதாள சாக்கடைத் திட்டம் – கடலூர் நகராட்சியில் கழிவு நீர் உந்து நிலையம் எண். 6–க்கு தனியார் நிலம் கிரயம் பெறுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணை – வெளியிடப்படுகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசு ஆணை(நிலை) எண்: 90 **நாள்: 14.05. 2010**

படிக்கப்பட்டது:-

1. அரசாணை எண்.115, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 6.10.06.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.7002/2010/ டிபி3 நாள்.13.03.2010.

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர் கடலூர் நகராட்சி ஆணையர், கடலூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்காக கழிவுநீர் உந்து நிலையம் எண்.6 அமைப்பதற்காக திரு.வி.எஸ்.ஜெகதீசன் அவர்களுக்கு சொந்தமான வார்டு எண்.6 பிளாக் 43 நகரளவு எண். 1385/1,2–ல் 16320 சதுரடியும், 1421/12–ல் 1980 சதுரடியும் ஆக மொத்தம் 18300 சதுரடி பரப்பளவில் கடலூர் தேவனாம்பட்டினத்தில் தனியார் நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தொகைக்கு பெற கிரயம் கோரியுள்ளார் என்றும், மேற்படி நிலம் கிரயம் செய்வதற்கான தொகையினை தனியார் பேச்சுவார்த்தையின்படி மாவட்ட ஆட்சி தலைவர், கடலூர் அவர்களால் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி நகரளவு எண்.1385/1,2–ல் சதுரடி ரூ.143.38 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் 16320 சதுரடிக்கு ரூ.23,39,962ம் நகரளவு எண்.1421/12ல் சதுரடி ரூ.150.28 வீதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், 1980 சதுரடிக்கு ரூ.2,97,554/– ஆக மொத்தம் 18300 சதுரடிக்கான தொகை ரூ.26,37,516/– ஆகும் என்றும் இத்தொகைக்கு அரசாணைப்படி 9 சதவீதம் முத்திரை தாள் ரூ.2,37,376/– ஆகும் என்றும் நிலமதிப்பு கட்டணத்துடன், முத்திரை தாள் கட்டணம் சேர்த்து ரூ.28,74,892/– ஆகும் என்றும் இத்தொகைக்கு மேற்படி நிலத்தினை கிரயம் பெறுவதற்கான அனுமதியினை கோரியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி கிரயத்திற்கு நில உரிமையாளரும் சம்மதக் கடிதம் அளித்துள்ளார். மேலும், கடலூர் நகர் மன்ற தீர்மான எண்.52, நாள் 8.2.2010 தீர்மானத்தில் மன்றம் தனது ஒப்புதலையும் வழங்கியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி இடத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த விலை விகிதத்தின்படியும், அரசாணைப்படி 9 சதவீதம் முத்திரை தாள் கட்டணத்துடன் சேர்த்து வரும் மொத்த தொகை ரூ.28,74,892/–ஐ பொதுநிதியிலிருந்து செலவு செய்து, கிரயம் பெறுவதற்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று கடலூர் நகராட்சியில் கழிவுநீர் உந்து நிலையம் எண். 6 அமைப்பதற்காக தனியாருக்கு சொந்தமான வார்டு எண்.6 பிளாக் 43 நகரளவு எண். 1385/1,2–ல் 16320 சதுரடியும், 1421/12–ல் 1980 சதுரடியும் ஆக மொத்தம் 18300 சதுரடிக்கான நிலமதிப்புக் கட்டணம் ரூ.26,37,516/–உடன் 9 சதவிகிதம் முத்திரை தாள் கட்டணத் தொகை ரூ.2,37,376/–யும் சேர்த்து ஆகும் மொத்தத் தொகை ரூ.28,74,892/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கிரையம் பெறுவதற்காக நிர்வாக அனுமதி அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 0 05.
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.
ஆணையர், கடலூர் நகராட்சி, கடலூர்.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை - 600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை – 600 017.

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (அந.2) துறை, சென்னை– 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.